# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 200/நகராட்சி/2018**

**நாள் : 24/09/2018**

**திரு எம். அப்துல்லா,
புத்தாநத்தம்,
மணப்பாறை வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,
மணப்பாறை நகராட்சி,
மணப்பாறை.** – **எதிர் மனுதாரர்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், புத்தாநத்தம், 1222–கிழக்குத் தெரு முகவயில் வசிக்கும் ஒருங்கிணைந்த மணப்பாறை தாலுகா மானாவாரி மற்றும் இறவை பாசனத்தாரர்கள் விவசாயிகள் சங்கத் தலைவர் திரு எம். அப்துல்லா அவர்களின் 30.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.05.2017 அன்று பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஒருங்கிணைந்த மணப்பாறை தாலுகா மானாவாரி மற்றும் இறவை பாசனத்தாரர்கள் விவசாயிகள் சங்கத் தலைவர் திரு எம். அப்துல்லா என்பவர், தனது சங்கத்திற்கு ஆவின் கடுபால் விற்பனை நிலையம் அமைக்க மணப்பாறை புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளில் கடை ஒன்றினை ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமானால், தனக்கு கையூட்டு வழங்க வேண்டுமென்று கோரிய நகராட்சி ஆணையர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். முறையீட்டு மனுதாரர் உரிய கட்டணத்தை நீதிமன்ற வில்லை மூலம் செலுத்தி, போதுமான ஆவண நகல்களுடன் விதிகளின்படி முறையாக முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கவில்லை. எனவே, 09.06.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதம் எண்.770/2017–இல் 2015–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில், விதி 5–இன் படி முறையான முறையீட்டு மனுவினை தாக்கல் செய்யுமாறு முறையீட்டு மனுதாரர் அறிவுறுத்தப்பட்டார். ஓராண்டு காலம் கடந்த நிலையிலும் மனுதாரரிடமிருந்து முறையான முறையீட்டு மனு பெறப்படவில்லை.

2. இந்நிலையில் நகராட்சி ஆணையர், முறையீட்டு மனுதாரரின் சங்கத்திற்கு கடை ஒன்றினை ஒதுக்குவது சம்பந்தமான கோரிக்கைக்கு 28.10.2017 நாளிட்ட கடிதம் எண்.744/A2/2017–இல் மனுதாரருக்கு உரிய பதிலினை அளித்துள்ளார். மேற்குறிப்பிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட பதிலினை எதிர்த்து முறையீட்டு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 20440/2017 எண்ணிட்ட நீதிப்பேராணையைப் 16714/2017 எண்ணிட்ட நீதிப்பேராணை பல்வகை மனுவினையும் தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை மனுக்களை பரிசீலனை செய்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை 07.11.2017 நாளிட்ட ஆணையில் கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

> "The fourth respondent (Commissioner, Manaparai Municipality) has rightly rejected the request of the writ petitioner. In any event it is not Aavin which is before the court. It is only a private individual who has come to the court. The petitioner has no locus standi and has no right either. There is no merit in the writ petition. Accordingly this writ petition stands dismissed."

கடை ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையே மேற்குறிப்பிட்ட தீர்ப்பினை வழங்கியுள்ள நிலையில், போதுமான ஆதார ஆவணங்களின்றி நகராட்சி ஆணையர் கையூட்டு கோரினார் என்ற முறையீட்டு மனுதாரரின் முறையீடு ஏற்புடையதாக இல்லை. மேலும், முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவம் கோரிய முறையான முறையீட்டு மனுவினையும் தாக்கல் செய்ய தவறியுள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரரின் குறைபாடான முறையீட்டு மனுவினை நிராகரித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திருமதி. அப்துல்லா,
   1222, கிழக்குத் தெரு,
   புத்தாநத்தம் அஞ்சல்,
   மணப்பாறை வட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   மணப்பாறை நகராட்சி,
   மணப்பாறை.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி